ஆகிவிடக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல் அதை நாம் நிச்சயமாகக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிகாரிகள் தவறுகளுக்கு, அவர்கள் செய்துவிட்டவற்றைத் தாக்குபிடிக்க முடியாத நிலையில் உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியம் அமைச்சருக்கு அல்லது அமைச்சரவைக்கு ஏற்பட்டு இங்கே சொல்லவேண்டியிருந்தால் அதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது கடமை என்றாலும் கூட அவரவர்கள், அதிகாரிகள் தன் உரிமையை அல்லது நியாயத்தை அவர்கள் கருதுகிறபடி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அறிக்கை வெளியிடுவதும் அந்த அறிக்கையை ஒரு பத்திரிகை வெளியிடுவதும் சரியல்ல. அந்தப் பத்திரிகை கூட சட்டத்தை உணராத பத்திரிகை, பத்திரிகை ஆசிரியர் என்று சொல்ல முடியாது. ஆகவே இந்த உரிமை மீறல் பிரச்னையில் பத்திரிகையையும் நாம் சேர்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஆகவே அதையும் இணைத்து உரிமைக் குழுவிற்கு அனுப்புவதுபற்றி பரிசீலிக்க வேண்டும் என்று நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்திய தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கூறிய கருத்துக்களை ஒட்டி ஒரு குறிப்பிட்ட அதிகாரி, பொறியியல் துறையைச் சேர்ந்த திரு. மணவாளன் என்பவர், வெளியிலே தெரிவித்திருக்கின்ற கருத்து, அதனை வெளியிட்ட பத்திரிகைகளின் செயல் இந்த அவையின் உரிமையை மீறியது, இந்த அவையின் உரிமையைப் பாதிக்கின்றது என்று இருப்பதால், இந்தப் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என்று இந்த அவை தீர்மானிக்கிறது ''

திருத்திய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

3. தகவல் கோரல். (தொடர்ச்சி.)

(இ) தேர்வு ஆணைக்குழு ஆதி திராவிட வகுப்பினர் எவரையும் பாரஸ்ட்ரேஞ்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்காதது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நான் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே தேர்வுகள் நடைபெறுகின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் ஆதி திராவிட மக்கள் நலனில் அக்கறை எடுத்து, பல முக்கியமான உறுதிமொழிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பாரஸ்ட் ரேஞ்சர்கள்

40 பேர்கள் தேர்ந்தெடுத்ததிலே ஒருவர்கூட ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்களை எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடத்திலும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் தற்போது இங்கே இருப்பதால், பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அந்த மக்களுக்குப் பாதகமான நிலை ஏற்பட்டிருப்பதால், ஆபத்து இல்லாத வகையில், சட்டத்தை அமுல் படுத்துகின்ற வகையில் முதலமைச்சர் அவர்களிடமிருந்து அதற்கான பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வாணைக் குழுவைச் சந்தேகிப்பது சரியல்ல, நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, நியமனம் என்று வரும்போது யாருக்கோ சலுகை காட்டிவிட்டார்கள், அதிலே விருப்பு வெறுப்பிற்கு உட்பட்டு விட்டார்கள் என்று சந்தேகப்படுவது நியாயம் அல்ல. ஆனால், தேர்வாணைக் குழு நியாயமான வகையில், எந்தெந்த வகையில் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையெல்லாம் பரிசீலித்து, தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களை நாம் சந்தேகிக்க ஆரம்பிப்போமானால், பிறகு நமக்குப் போக்கிடமே இருக்க முடியாது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் நியாயத்தை நிச்சயமாக அமுல்படுத்த வேண்டுமென்ற அக்கறை கொண்டாலும், யாரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று சொல்ல முடியாது. இன்னாரைத் தான், இந்த பகுதியினரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் சொல்ல முடியாது. ஆனால், எண்ணிக்கையைப் பற்றிச் சொல்லும்போது, இந்த இந்தப் பிரிவினருக்கு இவ்வளவு எண்ணிக்கை வருமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லலாம். அதைச் சொல்லியிருக்கிறோம் எந்த வகையில் அவர்களுக்கு அந்த எண்ணிக்கையைப் பூர்த்தி பண்ண முடியாமல் போய்விட்டது என்பது நமக்குத் தெரியாது. ஆகையால், என்ன வகையில் என்று கேட்கலமே தவிர, அவர்கள் மீது குற்றம் சுமத்தக் கூடாது, வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ன ன

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழக, கேரள மாநில மீனவர்களிடையே
ஏற்பட்டுள்ள மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற பொன்னப்ப ஆகியோர்

TRUTH ALONE TRIUMPHS